அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 11

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 03.06.2023** | **பக்கங்கள்: 20** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும்
   1. சார்பெழுத்துகள்
   2. முதலெழுத்துகள்
   3. தமிழ் நெடுங்கணக்கு
   4. இனவெழுத்துகள்

2. இராவணனின் காலத்தில் ஈழத்தின் தேசியக்கொடி
   1. விற்கொடி
   2. மீன்கொடி
   3. நந்திக்கொடி
   4. வீணைக்கொடி

3. நம்பியவருக்குத் தீங்கு செய்தல் என்னும் கருத்தை விளக்கும் மரபுச்சொற்றொடர்
   1. இரண்டகஞ்செய்தல்
   2. இடங்கொடுத்தல்
   3. கைகொடுத்தல்
   4. காதுகுத்துதல்

4. இப்பெட்டி மிகவும் அழகாக இருக்கிறது. இப்பெட்டி என்பது
   1. அகச்சுட்டு
   2. அகவினா
   3. புறச்சுட்டு
   4. புறவினா

5. நாயக்கர் காலத்தில் வாழ்ந்த அருணகிரிநாதரால் எழுதப்பட்டது
   1. சீறாப்புராணம்
   2. திருவுந்தியார்
   3. உண்மை விளக்கம்
   4. திருப்புகழ்

6. மலையின் வீழ் அருவி. இச்சொல்லியத்தில் இன் உருபு ஏற்ற வேற்றுமைப்பொருள்
   1. ஒப்பு
   2. எல்லை
   3. ஏது
   4. நீங்கல்

**1 2 3 4**

7. தமிழர்கள் வாழையடி வாழையாக ஈழத்தில் வாழ்ந்து வருகிறார்கள். வாழையடி வாழையாக என்பது
   1. இணைமொழி
   2. அடுக்குத்தொடர்
   3. இரட்டைக்கிளவி
   4. அடுக்கிடுக்குத்தொடர்

8. யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை வடிவமைத்த நூலகத்துறை அறிஞர்
   1. சாம் சபாபதி
   2. இரா. இரங்கநாதன்
   3. கே. நரசிம்மன்
   4. லோங் அடிகளார்

9. பெயர்ப் பகாச்சொல்
   1. நிலவு
   2. பொன்னன்
   3. கூனி
   4. ஆடும்

10. ஈட்டிய பொருளினும் எழுத்தே உடைமை என்ற பழமொழியின் கருத்து
    1. வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் வரும்
    2. கொடைசெய்து துன்பப்பட்டவர் எவருமில்லை
    3. நடந்து முடிந்த ஒன்றைப்பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை
    4. கல்வியின் சிறப்பு

11. 1949இல் ஈழத்தில் தமிழரசுக்கட்சியை உருவாக்கியவர்
    1. க.கா.(யீ.யீ) பொன்னம்பலம்
    2. பொன். சிவகுமாரன்
    3. சா. யே. வே. செல்வநாயகம்
    4. பொன். இராமநாதன்

12. அப்பாவுக்கு வயிற்றுவலி. வேலைக்குச் சென்றார். இச்சொல்லியங்களுக்குப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்
    1. ஆகவே
    2. எனினும்
    3. ஏனெனில்
    4. எனவே

13. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைத் தொகுப்புகளுள் ஒன்று
    1. வாசலில் நெருப்பு மூளும்
    2. குடும்பவிளக்கு
    3. காட்டுமல்லிகை
    4. கண்ணன் பாட்டு

1 2 3 4

14. நாட்டுப்பற்று என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. நா + பற்று
    2. நாட்டு + பற்று
    3. நாள் + பற்று
    4. நாடு + பற்று

15. இவன் யார் கொல்? இச்சொல்லியத்தில் கொல் என்பது
    1. இடைச்சொல்
    2. உரிச்சொல்
    3. வினைச்சொல்
    4. பெயர்ச்சொல்

16. சவர்க்காரம் என்ற பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
    1. சோப்பு
    2. வழலை
    3. குளம்பி
    4. கட்டி

17. கண் + ஓரம் என்பதைப் புணர்த்தினால்
    1. கண்ணோரம்
    2. கட்டோரம்
    3. கண்ஓரம்
    4. கண்னோரம்

18. இராவணனின் மகன்
    1. வச்சிரவாவு
    2. விபீடணன்
    3. சேயோன்
    4. கும்பகன்னன்

19. தன்னை ஏற்ற பெயரின் பொருளைச் செயப்படுபொருளாக மாற்றுவது
    1. முதலாம் வேற்றுமை
    2. ஐந்தாம் வேற்றுமை
    3. இரண்டாம் வேற்றுமை
    4. ஏழாம் வேற்றுமை

20. ஐந்து இலட்சம் மலையகத் தமிழர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டமைக்குக் காரணமான ஒப்பந்தம்
    1. பண்டா - செல்வா ஒப்பந்தம்
    2. சிறிமா - சாத்திரி ஒப்பந்தம்
    3. பண்டா - சாத்திரி ஒப்பந்தம்
    4. டட்லி - செல்வா ஒப்பந்தம்

1 2 3 4

21. இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலைப் பதிவுசெய்து வருகின்றன. வருகின்றன என்பது
   1. முன்னிலை, ஒருமை
   2. படர்க்கை, ஒருமை
   3. தன்மை, பன்மை
   4. படர்க்கை, பன்மை

22. அயர்ந்து என்ற சொல்லின் பொருள்
   1. சோர்ந்து
   2. மகிழ்ந்து
   3. நிமிர்ந்து
   4. சரிந்து

23. முடித்தான் என்ற சொல்லிலுள்ள பகுசொல் உறுப்புகள்
   1. பகுதி, விகுதி, இடைநிலை
   2. பகுதி, விகுதி
   3. பகுதி, சந்தி, இடைநிலை, விகுதி
   4. பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி

24. வான் நிலா என்பது
   1. நான்காம் வேற்றுமைத்தொகை
   2. ஏழாம் வேற்றுமைத்தொகை
   3. மூன்றாம் வேற்றுமைத்தொகை
   4. ஆறாம் வேற்றுமைத்தொகை

25. தமிழின் தொன்மைக்குச் சான்றாக விளங்கும் நூல்
   1. தண்டியலங்காரம்
   2. நன்னூல்
   3. வளையாபதி
   4. தொல்காப்பியம்

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இராவண காவியத்தின் கருப்பொருள் யாது?

______________________________________________

______________________________________________

2. குறளின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

   சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
   வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து

______________________________________________

______________________________________________

3. சிங்கள ஆட்சியாளரால் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களுள் இரண்டு எழுதுக.

______________________________________________

______________________________________________

4. செம்மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிகளுள் நான்கு எழுதுக.

______________________________________________

______________________________________________

5. கீழ்வரும் குற்றியலுகரச் சொற்களுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   நெடிற்றொடர்க் குற்றியலுகரம்: ______________________

   இடைத்தொடர்க் குற்றியலுகரம்: ______________________

6. தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? உம்மைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

______________________________________________

______________________________________________

7. கீழ்வரும் வினையடிகளை வினையாலணையும் பெயர்களாக மாற்றி எழுதுக.

   காண்: ______________ இயற்று: ______________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ளவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. அமிழ்தினும் இனிய தமிழே!

**2.**



________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(5 புள்ளிகள்)

**4. பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

இன்றைய எழுத்துலகில் பேச்சுவழக்கும் இலக்கியவழக்கும் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்தும் உதவியும் வருகின்றன. மக்களுக்குக் கருத்துகளையும் பட்டறிவுகளையும் எடுத்துச் செல்லத்தக்க வகையில் மொழியை வளர்க்கும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. கலை, இலக்கியங்களைப் பொறுத்தவரையில் அவை மக்கள் வாழ்வினை வளப்படுத்த உதவுபவையாக இருக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி உள்ளது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; கால வகையினானே' என்பது நன்னூலாரின் கூற்று. இறைவனையும் மேன்மக்களையும் பாடிய பழைய இலக்கியங்களைப் போலன்றி, புதிய இலக்கியங்கள் பொதுமக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன. அவர்களின் நடைமுறை வாழ்க்கை நிலைகளை உண்மையோடு நோக்குகின்றன. மரபுக்கவிதைகளை விட புதுக்கவிதைகளின் எளிமையான நடை மக்களைக் கவர்கின்றது. பேச்சுவழக்குகளும் நாட்டுப்புறப்பாடல் பாங்குகளும் புதுக்கவிதைகளில் கையாளப்படுகின்றன. தமிழில் புதுக்கவிதை வளர்ச்சிக்குக் காரணமானவர்களுள் முதன்மையானவர் என்ற பெருமை பாரதியாருக்கே உரியது. புதிய பட்டறிவுகளையும் சிந்தனைகளையும் நயம்பட வெளியிடும் புதுக்கவிதைகள் தமிழுக்கு வளம் சேர்க்கின்றன. அத்துடன், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. மேலும், அவர்களைச் சிந்திக்கவும் வைக்கின்றன.

(5 புள்ளிகள்)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

5. **தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

The Olympic was held in Greek first. It occurs once in every four years. Males and female participate in the Olympic Games. There are five interconnected rings in the Olympic flag. The colour of the rings are blue, yellow, black, green and red. The interconnected rings symbolize the unity of the five continents. The competitors who get first three places are awarded with gold, silver and copper medals, respectively.

**யேர்மனி:**

Die olympischen Spiele wurden in Griechenland gegründet. Sie werden alle vier Jahre veranstaltet. Bei den olympischen Spielen nehmen Männer und Frauen teil. Auf der olympischen Flagge befinden sich fünf verbundene Ringe. Sie bestehen aus den Farben blau, gelb, schwarz, grün und rot. Diese verbundenen Ringe stehen für den Zusammenhalt der fünf Kontinente. Es ist Regel, dass den ersten drei Platzierten bei den olympischen Spielen Medaillen aus Gold, Silber und Bronze verliehen werden.

**நோர்வே:**

De olympiske lekene startet i Hellas. Dette skjer en gang hvert fjerde år. Både menn og damer deltar på de olympiske leker. Det er fem ringer på det olympiske flagget. De er blå, gul, svart, grønn og rød. Disse ringene representerer de fem verdensdelenes felleskap. De som vinner de tre første plassene i de olympiske leker får gull-, sølv- og bronsemedaljer.

**இத்தாலி:**

I giochi olimpici sono stati iniziati in Grecia. Questi si svolgono ogni quattro anni. I giochi olimpici vengono frequentati sia da uomini che da donne. Nella bandiera olimpica ci sono cinque anelli uniti. Questi sono di colore blu, giallo, nero, verde e rosso. Questi anelli uniti rappresentano l'unione fra i cinque continenti. Nelle gare olimpiche a chi ottiene i primi tre posti gli vengono date rispettivamente le medaglie d'oro, d'argento e bronzo.

**நெதர்லாந்து:**

De olympische spelen zijn begonnen in Griekenland. Dit vindt 1 keer in de 4 jaar plaatst. Voor de olympische spelen doen mannen en vrouwen mee. De vlag van de olympische spelen bevat 5 samengevoegde ringen. Ze bevatten de kleuren blauw, geel, zwart, groen en rood. Deze samengevoegde ringen vertegenwoordigheden de eenheid van de vijf continenten. De spelers die de eerste 3 plaatsen veroveren van een Olympisch spel krijgen een gouden, zilveren of bronzen medaille toegekend.

**டென்மார்க்:**

De olympiske lege startede i Grækenland. Det afholdes én gang hvert fjerde år. Mænd og kvinder deltager i de olympiske lege. Det olympiske flag har fem forbundne ringe. De er blå, gule, sorte, grønne og røde. Disse sammensatte ringe repræsenterer de fem kontinenters sammenhold. De tre bedste i de olympiske lege tildeles guld-, sølv- og bronzemedaljer.

**சுவீடன்:**

De olympiska spelen började i Grekland. Detta utspelar sig vart fjärde år. Både män och kvinnor deltar i de olympiska spelen. På den olympiska flaggan finns det fem sammankopplade ringar. De är i färgerna blå, gul, svart, grön och röd. Dessa sammankopplade ringar står för de fem kontinenternas sammanhållning. De som kommer på de tre första platserna i tävlingarna får respektive guld-, silver1och bronsmedaljer

**பின்லாந்து:**

Olympialaiset (alkoivat, saivat alkunsa) Kreikassa. Se (järjestetään,suoritetaan) (kerran neljässä vuodessa, neljän vuoden välein). Sekä miehet että naiset osallistuvat olympialaisiin. Olympia lipussa on viisi yhdistettyä rengasta. Ne ovat väriltään sinisiä, keltaisia, mustia, vihreitä ja punaisia. Nämä yhdistetyt renkaat edustavat viiden mantereen yhtenäisyyttä. Olympialaisten (kulta-, kultamitali), (hopea-, hopeamitali) ja pronssimitallit jaetaan kolmelle parhaalle.

**தமிழ்:**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(5 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. மீண்டும் தொடங்கும் மிடுக்கு
2. யாழ்ப்பாணப் பொதுநூலகம்
3. புலம்பெயர் தமிழ் இளையோரின் திறவினைகள்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- பல்லின மக்களுடன் இணைந்த செயற்பாடுகள்
- திறவினைகளுக்கான வாய்ப்புகள்
- வென்றெடுத்த திறவினைகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

இறந்தவர்களுக்கு நினைவுக்கல் எழுப்பும் மரபு வையகத்தில் மிகத்தொன்மையானது. இம்மரபானது ஆதிகாலம் முதல் தமிழர்களிடையே இருந்தமைக்குப் பழந்தமிழ் இலக்கியங்களும் தொல்லியல் அகழாய்வுகளும் சான்றாக உள்ளன. ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களுக்கு மிகப்பெரிய கற்களைப் பயன்படுத்தி நினைவுச் சின்னங்களை அமைத்தனர். அவை கல்வட்டம், கற்பதுக்கை, நடுகல், தாழி எனப் பலவகைப்படுகின்றன. போரிலே வீரச்சாவடைந்த வீரனுக்கு நடுகல் நட்டு, அவன் பெருமைகளைக் கல்லிலே பொறித்து, அக்கல்லை வழிபட்டதாக எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு கூறுகிறது. இவ்வகை நடுகல் ‘வீரக்கல்’ என அழைக்கப்படுகிறது. குமுகாயத்தில் செல்வாக்குப் பெற்ற ஆண், பெண் இருபாலாருக்கும் இறந்ததன் நினைவாக ஆவுரஞ்சிக்கல், மடம், சுமைதாங்கி என்பன அமைக்கப்பட்டு, அவற்றில் அவர்களின் பெயரும் பணிகளும் எழுதப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, பிற்காலத்தில் இறந்தவருக்காக நடத்தப்படும் முப்பத்தோராம் நாள் சடங்கில் இறந்தவர் பெயரில் ‘கல்வெட்டு’ நூல் வடிவில் வெளியிடப்படுகிறது. எங்கள் தாயகத்தில் தாய்நாட்டினைக் காக்கும் போரிலே தம் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடும் மரபு ஏற்படுத்தப்பட்டது. அம்மாவீரர்கள் அனைவரையும் ஒருசேர ஒரேநாளில் வழிபடும் நோக்கில் ஆண்டுதோறும் நவம்பர் 27ஆம் நாள் தமிழீழத் தேசிய மாவீரர் நாளாக அறிவிக்கப்பட்டது. இன்றுவரை தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் இந்நாள் உணர்வெழுச்சியுடன் நினைவுகூரப்படுகிறது. தமிழீழத் தேசிய மலரான காந்தள், மாவீரர்களுக்குரிய மலராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அம்மலர் மாவீரர் நாளன்று மாவீரருக்கான வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகிறது.

1. தமிழரிடையே இறந்தவர்களுக்கு நினைவுக்கல் அமைக்கும் மரபு இருந்தமைக்கான சான்றுகள் எவை?

(2 புள்ளிகள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

2. பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரண்டு எழுதுக. (1 புள்ளி)

________________________________________________

________________________________________________

3. வீரக்கல் என அழைக்கப்படுவது எது? (2 புள்ளிகள்)

________________________________________________

________________________________________________

________________________________________________

4. பிற்காலத்தில் இறந்தவரின் நினைவாக நூல் வடிவில் வெளியிடப்படுவது எது? (1 புள்ளி)

________________________________________________

________________________________________________

5. ஆண்டுதோறும் நவம்பர் 27 மாவீரர் நாளாக ஏன் அறிவிக்கப்பட்டது? (2 புள்ளிகள்)

________________________________________________

________________________________________________

________________________________________________

6. தமிழர் வாழும் நாடுகளில் மாவீரர் நாள் எவ்வாறு நினைவுகூரப்படுகிறது? (1 புள்ளி)

________________________________________________

________________________________________________

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- தூய்மை காப்போம் வாரீர்!
- இயற்கை வளங்காக்கும் பேரணி
- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு
- மண்வளம் காப்போம்!

1. ________________________________________

மாந்தர் தமது தேவைகளுக்காக மரங்களை வெட்டுகிறார்கள். இதனால், பல பயன்தரு மரங்கள் அழிக்கப்படுகின்றன. அத்துடன், பெருமழைக் காலங்களில் மண்சரிவு ஏற்பட்டு மக்கள் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றார்கள். இயற்கையைக் காக்கவேண்டியது எமது கடமை. எனவே, நாம் எமது வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் புதிய மரக்கன்றுகளை நடுவோம். இப்புவியின் மண் வளத்தைப் பேணுவோம்.

2. ________________________________________

எம் நகர் வாழ் மக்களே! எமது நகரில் அமைந்துள்ள தொழிலகத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மெல்ல மெல்ல ஆற்றுநீருடன் கலந்து வருகின்றன. இதனால், காலப்போக்கில் பல இடர்களை எதிர்கொள்ள நேரிடும். குறிப்பாக எமது விளைநிலங்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளது. இதை விரைந்து தடுப்பதற்கான வழிகளை ஆராய்வதற்காக, இளையோரால் நாளை 16:00 மணிக்கு நகர மண்டபத்தில் ஒன்று கூடல் நடத்தப்பட உள்ளது. அனைவரும் திரண்டு வருக!

3. ________________________________________

இயற்கையை நேசிப்போரே! உங்களில் பலர், வீதிகளில் கொட்டும் குப்பைகளால் எமது ஊரின் வளமும் அழகும் சீர்கெடுகிறது. மண்ணுள் புதைந்தாலும் உக்கி அழிந்து போகாத நெகிழிக் கழிவுகள் வீதியோரங்களில் பெருமளவில் குவிந்து கிடக்கின்றன. எதிர்வரும் 10.06.2023 அன்று எமது பள்ளி மாணவர்கள் வினைக்கொடை மூலம் நகரைத் தூய்மைப்படுத்த உள்ளார்கள். பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுடன் இணைந்து வினைக்கொடை செய்ய வாருங்கள்!

(3 X 2 = 6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |